<u>**Deposition of Witness**</u>

<u>**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**</u>

Mcop 142 of 2023 c/w Mcop 144/23, 146/23, 148/23,150/23,152/23,154/23

எ.ம.சா.1 சேர்ந்தையன்

| | | |
|---|---|---|
| Name | : | சேர்ந்தையன் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 6.11.25 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் திருச்செந்தூர் கிளையில் ஒட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(நிரூபண வாக்குமூலம். தாக்கல் ஆவணங்கள் தாக்கல் இல்லை)

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து சம்பந்தமாக என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு பின்னர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின் போது இரண்டு அரசு பேரூந்துகள் மோதி கொண்டது என்றால் சரிதான். மனுதாரர்கள் அனைவரும் நான் ஒட்டி சென்ற அரசு பேரூந்தில் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். என் மீது தவறு இல்லை என கூறி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் எங்களது போக்குவரத்து

கழகம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக போக்குவரத்து கழகத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக பார்வைமகசர், மாதிரிவரைபடம் போன்றவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது விபத்து சம்பந்தமாக மெமோ மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. நான் பதில் கொடுத்துள்ளேன்.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.